[8th November 1966

அடிப்படைச் சம்பளம் ரூ. 200-ஆக இருக்கிறது. ஆகவே, இதை டிஸ்ட்ரிக்ட் முன்சீப் லெவலுக்கு உயர்த்துவது பற்றிக் கனம் முதல் அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: தற்பொழுது அம்மாதிரி ஒன்றும் உத்தேசம் இல்லை.

### குளச்சல் துறைமுகம்

*493 கேள்வி.—திரு. ஏ. சுவாமிதாஸ்: கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் எந்தெந்த துறைமுகங்களில் உணவு இறக்குமதி செய்யப்படுகிறது ?

(இ) குளச்சல் துறைமுகத்தையும் உணவு இறக்குமதிக்குப் பயன்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

(உ) ஆம் எனில், அதை விரிவுபடுத்த அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: (a) So far as Minor Ports are concerned, foodgrains are imported at Tuticorin port only.

(b) & (c) Import of foodgrains through Colachel Port could be considered only after the development works proposed for the port during the Fourth Plan period are completed.

### பலதார மணத்தடை

*494 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) முஸ்லீம் மதத்தினரின் பலதார மணத்தடைச் சட்டம் செய்ய மத்திய அரசு, மாநில அரசுக்கு இந்த ஆண்டில் கருத்துக்கள் ஏதேனும் கேட்டிருந்தார்களா ?

(இ) ஆம் எனில், அதைப்பற்றி அரசு தெரிவித்த கருத்து என்ன ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) ஆம்.

(இ) இது குறித்துப் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது.

திரு. எஸ். ஜே. ராமசாமி: இது குறித்து மத்திய அரசு கேட்டிருந்த தகவல்களுக்கு இந்த அரசாங்கம் என்ன செய்திருக்கிறது ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: The Commissioner of Police, Government Pleader, Registrar, High Court and Secretary, Bar Council, have been addressed and their replies are awaited.